# நான்மணிக்கடிகையில் கல்வி

***முனைவர் ஆ.பெ. மகேஸ்வரி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை (சுயநிதிப் பிரிவு)
ஆதித்தனார் கலை மற்றும், அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958647

## முன்னுரை

சங்க காலத்தில் மனிதன் காட்டில் திரிந்து காட்டுவாசி போல் திரிந்து வாழ்ந்தான். பின்னர் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதன் பின்னர் படிப்படியாகத் தன் அறிவை வளர்த்துக் கொண்டு கல்வியை வளர்த்தான். பின் கல்வி தான் மனிதனைப் பண்படுத்தும் என எண்ணி மன்னர் முதல் சாதாரண மனிதன் வரை கல்விக் கற்க எண்ணிக் கல்வியின் சிறப்பை அறிந்து பல்வேறு நூல்கள் மூலம் எடுத்து சொல்ல சான்றோர்கள் முன் வந்தனர். அவ்வகையில் நான்மணிக்கடிகையில் கல்வியின் சிறப்பை கூறியுள்ளதை இக்கட்டுரையில் காண்போம்.

## நான்மணிக்கடிகை

திருக்குறளின் கருத்துக்கள் பலவற்றை நான்மணிக்கடிகையில் காணலாம். இந்நூலின் ஆசிரியர் விளம்பிநாகனார் ஆவார். இவர் வைணவராதல் கூடும் என்பது கடவுள் வாழ்த்துப் பாடலால் அறிய முடிகிறது. ஒவ்வொரு பாடலிலும் ஒத்த நான்கு சிறந்த கருத்துக்களைச் சேர்த்திணைத்து, அழகிய சொற்களால் மிக எளிமையாக, பொருத்தமான உவமை நயத்துடன் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பல பொருண்மைகள்

இந்நூல், ஒழுக்கம் (பா. 60, 87), நட்பு (பா. 17, 19, 25, 26, 27, 38, 45, 63, 76, 88, 100), கடா நட்பு (பா. 23, 87), புகழ் (பா. 17, 24, 61), ஈகை (பா. 36, 37, 39, 50, 53, 71), விருந்தோம்பல் (பா. 46, 62), நன்றியுடைமை (பா. 69), செய்நன்றியறிதல் (பா. 13, 46, 60), பகை (பா. 25, 32, 61), பெண்ணின் பெருமை (பா. 11, 20, 21, 55, 56, 88, 89, 90, 91), தீயப் பெண்டீர் குணநலன்கள் (பா. 55, 84), வீடுபேறு (பா. 29, 158), மறுமை உலகம் (11), உயர்வு (பா. 49), பார்ப்பனரின் செயல் (பா. 54), மழையும் மன்னனும் (பா. 26, 48), அருளும் அன்பும் (பா. 7, 34), சார்ந்து வாழ்தல் (பா.28), தவயொழுக்கம் (பா. 14, 30), ஊழ்வினைப்பயன் (பா.41), போரின் சிறப்பு (பா. 36, 43), அறிவுடைமை (பா. 100), கீழ் மக்களின் சொல் (பா.99), கள்ளுண்ணல் தீங்கு (பா. 96), அருட்பண்பு (பா. 92), வெகுளாமை (பா. 4, 10, 13, 17, 39, 40, 69, 87) என்று பல பொருண்மைகளைப் பற்றி பேசியிருந்தாலும், கல்வியின் பெருமையினையும், கற்றோர் அடையும் சிறப்பினையும், கல்லாமையால் ஏற்படும் இழிவு நிலையைப் பற்றியும் அதிகமாக பாடல்கள் பாடப்பட்டுள்ளது. கல்வியின் உயர்வினையும் கல்லாமையால் ஏற்படும் இழிவு நிலையை விளக்குகிறது.

***தமிழ்ச் சமூகத்தில் கல்வி நிலை***

*கல்வி எனப்படுவது ஒருவனால் சொந்த முயற்சியால் ஈட்டப்படுகிற தகுதியாகும். கற்ற கல்வியால் ஒருவனுக்கு உலக அரங்கிலே பெருமையும் சிறப்பும் இரு மடங்காக உயர்வடைகின்றன. கல்வி கற்றவன் உயர்ந்தவன், கல்லாதவன் பேதை, அறிவிலி, தாழ்ந்தவன் என்று அநேகமாக எல்லா நீதி நூல்களும் ஒது கின்றன. சான்றாக, புறநானூற்றுப் பாடல் ஒன்றைக் கூறலாம்.*

***"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்***
***பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே***
***பிறப்பு ஓரன்ன உடன்வயிற் றுள்ளும்***
***சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்"***

***(புறம் - 183)***

*கற்றல் நன்று ஏனெனில் தாயும்கூடத் தன் புதல்வருள் கற்றவன் மீதே பிரியம் கொள்வாள். அரசுரிமையும் கூட, மரபை மீறி, அரசகுடியில் பிறந்த கல்வியறிவற்ற மூத்தவனை விடுத்து, கற்றறிந்த இளையவனுக்கே செல்லும். ஏற்றத் தாழ்வுள்ளநான்குவருணங்களில்கீழ்வருணத்தில் (சூத்திரன்) பிறந்த ஒருவன் கற்றிருந்தால், மேல் வருணத்தில் (பிராமணன்) பிறந்தவனாயினும் ஒருவன் கற்கவில்லையெனில், அவனுக்கு (சூத்திரனுக்கு) கீழ்ப்பட்டவனே என்பது இப்பாடலின் பொருள்.*

*தாய் தான் பெற்ற பிள்ளைகளில் ஒருவனிடம் மட்டும் ஓரவஞ்சனையாக நடக்கமாட்டாள். அரச உரிமையும் முறைமாறி வராது. இருப்பினும் இவ்வாறு கூறுவதற்கு காரணம் கல்வியின் சிறப்பை உணர்த்துவதற்கே ஆகும்.*

***"கடைநிலத்தோர் ஆயினும் கற்றறிந் தோரைத்***
***தலைநிலத்து வைக்கப் படும்" (நாலடி - 133)***

*என்ற நாலடியார் பாடலும் கல்வியின் உயர்வை, குலப்பிறப்பை ஒட்டியே விளக்குவதை அறிய முடிகின்றது. பிராமண வருணம் பிறப்பால் உயர்ந்தது, சூத்திர வருணம் தாழ்ந்தது என்பவை ஒப்பற்ற உண்மைகள். சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைகிறது என்ற உண்மைக்கு ஒப்பான உண்மைகள். இவை (ராஜ் கௌதமன், தமிழ்ச் சமூகத்தில் அறமும், ஆற்றலும், பக்.119-120). தமிழ்ச் சமூகத்தில் நிலவியிருந்த கல்வி கட்டமைப்புகளை மூன்று நிலைகளில் வகைப்படுத்துகிறார் ராஜ் கௌதமன் அவர்கள்.*

*1. உயர்கல்வி*
*2. சாஸ்திரம் (கலை) அல்லது பனுவல் / நூல் கல்வி*
*3. தொழில் நுட்பக் கல்வி*

***உயர்கல்வி***

*உடைமை நாகரிகத்தைச் சேர்ந்த சங்க காலச் சமூகப் பகுதியில் கல்வி எனப்படுவது உயர்கல்வியாகும். ஞானம் பற்றிய கல்வியாகும். இதனுள் அன்றைய புலவர் மரபின் இலக்கியம், (அகம், புறம்) எழுத்து, சமண பௌத்த மதங்களின் அறங்கள், வைதீக-பிராமணிய வேதம், வேள்வி மற்றும் தரும, அர்த்தம் பற்றி பனுவல்கள் அடங்கும். பொருள் இகந்த உண்மை, சமய உண்மை, ஒழுக்கவியல் உண்மை ஆகிய உண்மைகளுக்கு உரிமை பாராட்டிய கல்வியாகும். இவ்வுண்மைகள் அறுதியானவை, முழுமையானவை, நிரந்தரமானவை என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தன. நன்மை-தீமை என்ற மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே அக்கல்வி கட்டப்பட்டிருந்தன.*

***சாஸ்திரம் (கலை) அல்லது பனுவல் ஃ நூல் கல்வி***

*இக்கல்வி முறை அரசர் முதலான உயர்குடியாரின் ஆள்வினைகளுக்கு நேரடியாகப் பயன்படுகின்ற கல்வி. இது வடமொழியிலிருந்து பெரிதும் கற்பிக்கப்பட்டது (அ) தமிழில் பெயர்க்கப்பட்டது. அரசர்க்குரிய அர்த்த சாஸ்திரம், போர்க்கலை, நால்வகைப் படைகளை உருவாக்கி பேணும் கல்வி, யானை, குதிரை நூல்கள் இதிலடங்கும். சமையற்கலை, மருத்துவம், அரண்மனை முதலான பெரும் கட்டிடங்களைக் கட்டுவதற்கான கட்டிடக் கலை (நெடுதல் வாடை) அரியகல், மணி, பொன், பவளம் பற்றிய கலைகள் இவ்விதக் கல்விக்குரியன. ஞானம் குறித்த கல்வியும், கலைகள் குறித்த கல்வியும் உடைமை நாகரிகத்தின் விளைவுகளாகும்.*

### தொழில் நுட்பக் கல்வி

வேளாண்மைக்குரிய கருவிகள் தயாரிக்கும் தொழில்கள், கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு, போக்குவரத்து - விவசாயம் ஆகியவற்றுக்குக் கால்நடைகளைப் பயன்படுத்தும் தொழில், இரும்பு, மரம், மட்கலன்கள், கயிறு, தச்சுத் தொழில்கள் ஆகிய பல்வேறு தொழில்கள் இக்கல்வி முறையில் அடங்கும்.

### தமிழ்ச் சமூகத்தில் கல்வியாளர்கள்

சங்க காலச் சமூகத்தில் பெற்றோர்களே ஆசிரியர்கள், அவர்களோடு பாணர், கூத்தர், புலவரும் ஆசிரியர்களாக செயல்பட்டனர். குறிப்பாக இரட்டைக் காப்பியங்கள் காட்டுகின்ற தமிழ்ச் சமூகத்தில் வேதப் பிராமணர்களும், சமண பௌத்தத் துறவிகளே தமிழகத்தின் முதன்மைக் கல்வியாளர்களாக இருந்துள்ளனர். சங்க காலத்தின் தொடக்கத்தில் பொதுத் தன்மையும், முறைசாராத்தன்மையும் கொண்டிருந்த கல்வி பின்னர் சமயம் சார்ந்த முறைசார் கல்வியாக மாறியது. பண்டைய கிரேக்கம், செல்டிக் மற்றும் வடஇந்தியாவில் நிலவியிருந்த சமூகப் பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப கல்வி முறையும் வடிவமைக்கப்பட்டிருந்தது. பல சமூகங்களையும் ஆராயும் போது அம்மக்களிடையே கல்விச் சிந்தனைகள் ஒரு சீரான வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அறிய முடிவதாக பேரா.சேவியர் தனிநாயகம் அடிகளார் கூறுகிறார். (பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி, பக்.33-34)

தனிநாயக அடிகளார் கூறுவது போன்ற சமணம் - பௌத்த சமயம் சார்ந்த முறைசார் கல்வியாகவும், ராஜ் கௌதமன் கூறுவது போன்று சமண - பௌத்த மதங்களின் அறங்கள், வைதீக - பிராமணிய வேதம் - உயர்கல்வியாக போதிக்கப் பட்டதும், ஒழுக்கம், உண்மை, அறுதியானவை, முழுமையானவை, நன்மை-தீமை என்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் கட்டமைக் கப்பட்டு, உயர்கல்வியாக கருதப்பட்ட காலக்கட்டத்தில் தமிழ்ச் சமூகத்தில் உருவான பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் ஒன்றான நான்மணிக்கடிகை என்ற நூலின் வழி தமிழ்ச் சமூகத்திற்கு கல்வியின் தேவையை உணர்த்தியதை அறியலாம்.

### நான்மணிக்கடிகை - கல்வி

இந்நூல் உணர்த்தும் கல்வி பற்றிய செய்திகளை மூன்று வகையில் அடக்கலாம். 1. கல்வியால் பெறும் பயன்கள், 2. சான்றோர் பெருமை, 3. கல்லாமையால் ஏற்படும் இழிவு இவற்றைப் பற்றி நான்மணிக்கடிகை பாடல்கள் வழி அறிவோம்.

### கல்வியால் பெறும் பயன்கள்

நல்லொழுக்கம் என்பது கல்வியறிவினால் விளைவதாகும். (ஆதாரம் என்பது கல்வி - பா.95) கல்வி அறிவை உண்டாக்கும் (பா.24). அறிவு நூல்களைக் கற்றால் அறியாமைக் குறையும். அறியாமை குறையப் பெற்றவனால் புல்லறிவு நீங்கி உலக இயற்கையை அறிய இயலும். உலக இயல்பை அறிந்தவன் மெய்ந் நெறியாகிய நன்னெறியில் செல்வான். நன்னெறியில் செல்பவன், இவ்வுலகத்தில் புகழை நிறுத்தி மறுமையில் வீட்டுலகம் அடைவான் (பா.29), தனக்கொரு துன்பம் வந்துவிடத்து அவனுக்கு கற்ற அறிவே துணை நிற்கும் (தனக்கொன்று உறுவுழி நிற்பது அறிவு, பா.30), செல்வம் போல ஒருவருக்கு வலிமையுடையது வேறில்லை அதுபோல கல்வியைப் போல துணையாவது பிறிதில்லை (பா.31) ஒரு குடியில் படிக்காதவன் மூத்தவனாக இருந்தாலும் அவனை மதிக்க மாட்டார்கள். படித்தவன் இளைஞனாயினும் அவனை மதித்துப் பாராட்டுவர்.

**"கல்லா மூத்தானைக் கைவிடுப கற்றானின்**
**இளமை பாராட்டும் உலகு"**

**(நான்மணி - 65)**

என்ற வரிகள், மூத்தோன் வருக என்னாது (புறம் - 183), என்ற புறநானூற்று பாடலோடு ஒத்து வருவதை அறியலாம்.

### சான்றோரை வயப்படுத்தல்

யானையைக் கட்டுத் தறியினால் வயப்படுத்துவர். நச்சுப் பாம்பை மந்திர மொழியால் வயப்படுத்துவர். கீழ்மக்களை விலங்கால் வயப்படுத்துவர்.

ஆனால் சான்றோரை விலங்காலோ, மந்திரத்தாலோ வயப்படுத்த முடியாது. சான்றோரை இன்சொல்லால் மட்டுமே வயப்படுத்த இயலும் (பா.12).

**கல்லாமையால் வரும் இழிவு**

மனைக்குப் பால் வாள்நுதல் இன்மை. தனக்குப் பாழ் கற்றறிவு இல்லா உடம்பு (பா.22). நல்ல மனைவி இல்லாமையால் இல்லறம் பயனற்றது போவதைப் போல கல்வியறிவு இல்லாத உடம்பும் பாழாகும் என்பது கருத்து. "குலனும் குடிமையும் கல்லாமைக் கீழ்ச்சாம்" (நான்மணி.பா-82) கல்வியறிவு இன்மையினால் ஒருவனின் குலத்துயர்வும் குடிப்பிறப்பின் ஒழுக்கமும் குன்றும். இவை நீர் ில்லாத ஏரியின் கீழ்ப் பயிர் கெடுவது போன்றதாகும்.

மெல்லிலை வாழைக்குத் தான் ஈன்ற குலையே எமனாவது போல, கல்வியறிவில்லாத அறிவிலிக்கு அவன் வாய்ச் சொல்லே எமனாக முடியும் (பா.84). "இளமை பருவத்துக் கல்லாமைக் குற்றம்" (பா.93) பொருள் இல்லாத காலத்தில் ஈகை செயல்களைச் செய்வது பெருங் குற்றமாவது போல இளம்பருவத்தில் கல்வி கல்லாமை பெருந் தீமையாகும்.

**முடிவுரை**

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் பெரும்பாலான நூல்கள் சமணர்களால் இயற்றப்பட்டதே எனினும், இந்நூல்களில் எடுத்துரைக்கும் அறக்கருத்துக்கள் திருக்குறள் போல உலகப் பொதுமறையாகவே திகழ்கிறது. விளம்பி நாகனாரால் இயற்றப்பட்ட நான்மணிக்கடிகையும் மனித வாழ்விற்கு வேண்டிய பல வாழ்வியல் நெறிகளை சிறந்த தகுந்த உவமை நயத்துடன் எடுத்துரைக்கின்றது. அறநூல்கள் எச்சமயத்தைச் சார்ந்தது என்று பாராமல் அந்நூல்கள் கூறும் முறைப்படி வாழ்வதே மனித வாழ்விற்கு ஏற்றம் அளிக்கும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**பார்வை நூல்கள்**

1. இலக்கியக் களஞ்சியம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், தெளிவுரை - பெரும்புலவர் எம். நாராயணவேலுப் பிள்ளை, கலைஞன் பதிப்பகம்.
2. தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும் - ராஜ் கௌதமன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
3. புறநானூறு, மூலமும் பழைய உரையும் - டாக்டர் உ.வே. சாமிநாதன்.
4. நெடுநல்வாடை- சா.வே. சுப்பிரமணியன்.